சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001.

தேதி: 10.04.2026.

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 123/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-14 |
| சாட்சியின் பெயர் | : | ஞானபிரகாசம் |
| தந்தை பெயர் | : | வெங்கடாச்சலம் |
| கிராமம் | : | மூலங்குடி |
| தாலுக்கா | : | குடவாசல் |
| தொழில் | : | வட்ட வழங்கல் அதிகாரி, வலங்கைமான் வட்டம் |
| வயது | : | 43 |

2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் பலகை எழுத்தர் நிலை-I ஆக பணிபுரியும் திருமதி.A.லதா அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தற்போது வலங்கைமான் வட்டாட்சியர் அலுவகத்தில் வட்ட வழங்கல் அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு திருவாரூர் வட்டாட்சியர் அலுலகத்தில்

மண்டல துணை வட்டாட்சியராக பணிபுரிந்தபோது திருத்துறைப்பூண்டி உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் கொடுத்த வேண்டுகோள் கடித்ததின் அடிப்படையில் திருவாரூர் மாவட்டம், கடுவங்குடி கிராமம், ஆண்டியூர் பகுதியை சேர்ந்த சுரேஷ் என்பவர் மகன் எதிரி சூரியா இந்து பிற்படுத்தப்பட்ட மறவர் என்ற சமூகத்தை சேர்ந்தவர் என சாதி சான்றிதழ் கடந்த 17.04.2025 ஆம் தேதி வழங்கினேன். அந்த சாதி சான்றிதழ் **அ.சா.ஆ-9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:**

பொதுவாக எங்கள் வட்டாட்சியர் அலுவலகத்தில் வழங்கப்படும் சாதி சான்றிதழ் அரசாங்க முத்திரை போட்டு தான் வழங்கப்படும் என்றால் சரிதான். நான் வழங்கியதாக சொல்லப்படும் அ.சா.ஆ-9 ல் அரசாங்க முத்திரை இல்லை என்றால் ஆமாம். இது போன்ற சான்றுகளில் அரசாங்க முத்திரைகள் இடுவதில்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.04.10 15:47:38 +0530

அமர்வு நீதிபதி,

எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு

நீதிமன்றம், திருவாரூர்.